## பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2025-ம் ஆண்டு ஜூலை திங்கள் 03ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்................................................ மாவட்டம்.....................................................

கிராமம்........................................................... தந்தை /கணவர் பெயர்.........................................

தாலுக்கா......................................................... தொழில்..............................................................

--------------------------------------------------------------------------------------------------------

# Probate.O.P. No. 306/2020

# 03.07.2025

**ம.த.சா.1- திரு. அண்ணாமலை, த/பெ. சொக்கலிங்க முதலியார்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. சொக்கலிங்கம் என்பவரது இறப்புச்சான்றிதழ் **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 03.03.1997 தேதியிட்ட மதிப்பிடாத உயில் சாசனம் (ஆவண எண் 4/1997) **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. சொக்கலிங்கம் என்பவரின் வாரிசு உரிமைச்சான்றிதழ் **ம.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட மனுச்சொத்தின் வழிகாட்டு மதிப்பு **ம.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. பொன்னியம்மாள் என்பவரது இறப்புச்சான்றிதழ் **ம.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 13/10/2023 தேதியிட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் 15/2020ல் பிறப்பிக்கப்பட் தீர்ப்பின் சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 13/10/2023 தேதியிட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் 15/2020ல் பிறப்பிக்கப்பட் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. அசல் வழக்கு எண் 3/2014ல் தாக்கல் செய்யப்பட்ட வாதி / 1ஆம் எதிர்மனுதாரரின் பிரமாண வாக்குமூலம் மற்றும் குறுக்கு விசாரணை **ம.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. அசல் வழக்கு எண் 3/2014ல் தாக்கல் செய்யப்பட்ட 2ஆம் வாதி / 2ஆம் எதிர்மனுதாரரின் பிரமாண வாக்குமூலம் மற்றும் குறுக்கு விசாரணை **ம.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.